இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2023/2024

மட்டம் - 06

**LLU6814– தீங்கியல் சட்டம்**

இறுதிப் பரீட்சை

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 09.05.2025 நேரம்: பி.ப 02.00 - பி.ப 05.00

மொத்த வினாக்களின் எண்ணிக்கை – 07

நான்கு (04) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. உரோமன் சட்டத்தில் அவதூறு எனும் பிழையானது ஊறிற்கான வழங்கினை *(actio injuriarum)* நிவாரணமாகக் கொண்ட ஊறின் (injuria) இன் உள்ளடக்கமாக கருதப்பட்டது. ஊறின் பிற வகைகளைப் போன்று அவதூறிற்கான பொறுப்புடைமை ஆனது அவமானப்படுத்தும் எண்ணம் (*animus injurandi*) என்பதன் நிருபணத்தில் தங்கியுள்ளது. இப்பிண்ணனியில் அவமானப்படுத்தும் எண்ணம் ஆனது கருத்துடனான தவறு (dolus) என்பதன் வெறும் உள்ளடக்கம் ஒன்று – வாதியை அவமதிப்பதற்கான எண்ணம் ஒன்றின் நிருபணம் ஆகும். இந்நிலை, அவதூற்றிற்கான அவமானப்படுத்தும் எண்ணம் ஊகிக்கப்படும் சாதாரண பொருளில் உள்ள வார்த்தைகள் என்பதில் உரோமன் டச்சு சட்டம் தங்கியிருப்பதால் ஒத்ததாகும்.

   R.G.McKerron, The Law of Delict (7th ed) 1971 at 170

   மேலுள்ள கூற்றின் கீழ் அவதூறிற்கான பொறுப்புடைமை நிறுவுவதில் அவமானப்படுத்தும் எண்ணம் *(animus injurandi)* தொடர்பில் உள்ள பின்வரும் விடயங்கள் மீது ஆராய்க.

   அ) அவமானப்படுத்தும் எண்ணம் *(animus injurandi)* என்பதன் பொருளும் உள்ளடக்கங்களும் (10 புள்ளிகள்)

   ஆ) அவமானப்படுத்தும் எண்ணம் *(animus injurandi)* என்பதனை நிருபிக்க வேண்டிய திறத்தவர்கள் (05 புள்ளிகள்)

   இ) அவமானப்படுத்தும் எண்ணத்தினை *(animus injurandi)* தீர்மானிக்க பயன்படுத்தப்படும் பரீட்சை (05 புள்ளிகள்)

   ஈ)அவதூறிற்கான வழக்கிற்கு கிடைக்கத்தகு எதிர்வாதங்கள் (05 புள்ளிகள்)

   உமது விடையை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆதாரப்படுத்துக.

2. "தமது கிடங்கில் பீப்பாய்களை வைத்திருக்கும் நபர்களின் கடமை ஆனது அவை வெளியே வீழாதிருப்பதற்கான கவனத்தை கொண்டிருத்தல் என்பதுடன், அவ்வாறு நிகழும் சந்தர்ப்பம் ஒன்று, சகல ஐயங்களுக்கும் அப்பால் கவனயீனம் என்பதற்கான சான்றை வழங்கும் என நான் எண்ணுகிறேன்"

   *Byrne v Boadle* (1863) 2 H. & C.722

மேலுள்ள கூற்றின் மீது செயலே செப்பும் (*Res ipsa loquitur*) எனும் கோட்பாட்டையும் அதன் உள்ளடக்கங்களையும் ஆராய்க.

***Byrne v Boadle,*** (1863) 2 H. & C.722 முதலான பொருத்தமான வழக்கு உதாரணங்களை எடுத்துக்காட்டி உமது விடையை விபரிப்பதுடன் தீங்கியல் சட்டத்தில் கவனயீனத்தை நிருபிப்பதில் அதன் பங்கை கணிக்க

(25 புள்ளிகள்)

3. ருவண் மற்றும் இசாரா ஆகியோர் வெல்கென கிராமிய நகரின் அமைதியான தங்குமிடத்திற்கு நகர்ந்தனர். அவர்கள் கண்டியில் வாகன புகை மற்றும் கடுமையான தூசி என்பன காரணமாக மோசமுற்று இருந்த இசாராவின் சுவாசப்பிரச்சினை காரணமாக இவ்வாறு தங்குமிடத்தை மாற்றியிருந்தனர். அவர்களின் புதிய இல்லம் ஒரு மலையின் மீது அருமையான பண்ணை சூழலில் அமைந்துள்ளதுடன் பின்புறத்தில் இசாரா கொண்டிருக்கும் ஒரு சிறிய மூலிகைத் தோட்டமும் சில முயல்களும் காணப்படுகின்றன.

இவர்களின் உடைமைக்கு அருகில் இருந்த உடைமையை சுரேன் என்பவன் சொந்தமாகக் கொண்டிருந்தான். இவர்களின் வருகையின் சில வாரங்களின் பின்னர் அவனது காணியில் மோட்டார் வாகனங்களைத் திருத்தும் இடம் ஒன்றை அவன் ஆரம்பித்தான் அதிகாலை முதல் மாலை வரை வாகனங்களை பழுது திருத்தும் பல்வேறு செயல்களின் சத்தம் எழுப்பப்பட்டது. பழுது பார்ப்பதற்கு பயன்படுத்தப்பட்ட எண்ணெய் மற்றும் கழிவுகள் தொடர்ச்சியாக அருகில் இருந்த இரு உடைமைகள் ஓரத்திலும் ஓடிய ஓடை ஒன்றிற்குள் அகற்றப்பட்டன. தனது மூலிகைத் தோட்டத்திற்கு இந்த ஓடையில் இருந்து நீர் சேகரிக்கும் ருவண் தற்போது தண்ணீர் மோசமாக மாசடைந்துள்ளதை கண்ணுற்றான்.

மறுபுறம் குமாரி என்பவள் அவளுடைய குடும்பத்தாருடன் அவளுடைய பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆட்டுப்பண்ணை மற்றும் ஒரு சிறிய கோழிப்பண்ணை என்பனவற்றுடன் வாழுகிறாள். ஒரு தசாப்பத்திற்கு மேலாக விலங்குகளை அவள் கொண்டிருக்கிறாள். ஆயின் ஆட்டுக்கழிவுகளின் துர்நாற்றமும் கோழி கழிவுகளின் தூசும் இசாராவின் ஆரோக்கியத்தை மீண்டும் பாதிக்க ஆரம்பித்தது. அதிகாலையில் ஆடு மற்றும் கோழிகளின் சப்தமும் அவர்களின் தூக்கத்தை பாதித்ததுடன் வெல்கெனவிலிருந்து இங்கு அவர்கள் நாடி வந்த அமைதியையும் குலைத்தது.

ருவண் இரு அயலர்களிடம் ஏதேனும் சிறு ஒத்துழைப்பை வேண்டி பல முறை பேசி இருந்தாலும் சுரேன் பகைமையுடன் நடந்து கொண்டான். பழிவாங்கும் வண்ணம் தற்போது பொருத்தமில்லாத நேரங்களிலும் அதிக சத்தத்தை வேண்டுமென்று எழுப்பினான். ஒரு நாள் மாலை சுரேனின் பழுது திருத்துமிடத்தில் ஒரு எண்ணெய் தாங்கி தீப்பிடித்து ஒரு சிறிய வெடிப்பு ஏற்பட்டது. இந்த தீ உடனடியாக பரவியதுடன் ருவண் மற்றும் இசாராவின் தங்குமிடத்தையும் மூலிகைத்தோட்டத்தின் ஒரு பகுதியையும் பாதித்தது.

ருவண் மற்றும் இசாரா ஆகியோர் , சுரேன் மற்றும் குமாரி ஆகியோருக்கு எதிராக ஏதேனும் தீங்கியல் வழக்கை மேற்கொள்ள முடியுமா என உமது அறிவுரையை நாடுகின்றனர்? அவர்களுக்கு அறிவுறுத்துக.

தீர்க்கப்பட்ட வழக்கு உதாரணங்களால் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

4. "ஆபத்தான நிலப்பரப்பின் மீது கட்டுபாட்டை கொண்டுள்ள ஒரு நபரிற்கு, அந்த நிலப்பரப்பிற்கு வருகை தருவோரை அவர்களின் பாதுகாப்பிற்கான நியாயமான கவனத்தை எடுப்பது ஒரு கடமை ஆகும்."

R.G Mckerron, The Law of Delict, (7th ed) 1971, at 240

ஆபத்தான இடங்களின் மீதான இடம் கொள்வோர் பொறுப்புடைமை எனும் கருத்தேற்பை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பனவற்றுடன் ஆராய்க.

(25 புள்ளிகள்)

5. சமன் என்பவன் ஒரு வாரத்தில் இருபத்துநான்கு மணித்தியாலங்கள் செயற்படும் கடை ஒன்றான கிறின் சிற்றி சுப்பர் மார்க்கெட்டின் உரிமையாளர் ஆவான். சுத்தமாக வைத்துக்ககொள்வதற்காக எட்டு மணித்தியால நேர பணியுடன் (shifts) வேலையாற்றும் வேலையாட்களைக் கொண்டுள்ள ஒரு சுத்தப்படுத்தும் கம்பனியான மாஸ்ரஸ் கிளினர் பிரைவெட் லிமிட்டட் என்பதன் சேவைகளுக்காக ஒப்பந்தம் செய்தான். ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் சுத்தம் செய்யும் பணியாளர்கள் அங்காடியின் நிலப்பரப்பை சகல 30 நிமிடங்களுக்கும் ஒரு தடவை கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டிருந்தது. கண்காணித்து ஏதேனும் சுத்தமற்று இருக்கும் போது உடனடியாக அதனை அகற்றுவதற்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

2018 அக்டோபர் காலை அன்று அன்றாட வாடிக்கையாளர் ஒருவரான ரமணி என்பவர் சமையல் எண்ணெய்யை வாங்குவதற்காக அங்காடிக்கு வந்திருந்தாள். பாடசாலையில் இருந்து தன் பிள்ளையை அழைத்துக்கொள்ள வேண்டிய அவசரத்தில் இருந்த அவள் சமயலறை அவசியப்பொருட்கள் இருந்த இடத்தில் நிலத்தில் சிந்தப்பட்டு இருந்த எண்ணெயில் வழுக்கி விழுந்தாள். வீழ்ந்ததால் கடுமையான தலை காயத்தை அனுபவித்த அவர் தொடர்ச்சியாக ஆறு மாதங்களிற்கு ஓய்வெடுக்க தள்ளப்பட்டார்.

இந்நிகழ்வை அடுத்து உள்ளக விசாரணை ஒன்றை மேற்கொண்ட சமன், மாஸ்ரர்ஸ் கினர்ஸ் பிரைவெட் லிமிட்டட் இனால் பணிக்கு அமர்த்தப்பட்ட மகேஸ் எனும் சுத்தம் செய்பவர் சம்பவம் நடைபெற்ற தினத்தன்று அங்காடியை பராமரிக்க கோரப்பட்டிருந்தமை தெரிய வந்தது. CCTV காட்சியானது விபத்து நடைபெற முன்னர் எண்ணெய் நிலத்தில் சிந்தியிருந்ததுடன் அது 45 நிமிடங்களுக்கு மேலாக சுத்தம் செய்யாமலும் காணப்பட்டமை கண்டறியப்பட்டது.

ரமணி தன்னுடைய காயங்களுக்காக நிவாரணம் கோரி சட்ட வழக்கு ஒன்றை மேற்கொள்ள விரும்புகிறாள்.

மேலுள்ள நிகழ்வின் திறத்தவர்களின் மீது பகரப் பொறுப்புடைமை தொடர்பாக அவளிற்கு அறிவுறுத்துக.

உமது விடையில் எதிர் வாதிகளாகக் கூடியவர்களை இனங்கண்டு அவர்களிற்கான பொறுப்புடைமைகளை விபரிக்க. உமது விடையை பொருத்தமான சட்டக்கோட்பாடுகள் மற்றும் வழக்குத்தீர்ப்புகள் என்பனவற்றால் ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

6. நிமல் என்பவன் பாதை ஓரத்தில் பாதசாரிகளுக்கான நடைபாதையில் நடக்கும் போது பாதையில் அப்போது கடந்து கொண்டிருந்த தன்னுடைய மனைவி ஒரு வேகமான காரில் மோதி மோசமான விபத்தை சந்தித்து அவ்விடத்தில் மரணித்ததை கண்ணுற்றான். நிமல் மொத்த சம்பவத்தையும் தன் கண்களை இமைக்காமல் கண்டான். அவன் அவளிடத்தே ஓடிய போதும் அவள் காயத்தால் இறந்திருந்தாள்.

சம்பவத்தின் பின்னர் நிமல் கடுமையான மன உளைச்சலுக்கு (Post – traumatic stress disorder (PTSD) ஆளாகியதுடன் அதற்கான மருத்துவத்தையும், மன நல சிகிச்சையையும் தொடர்ச்சியாகப் பெற்றான். அவனது இந்நிலைமையால் அவன் பணிக்கு திரும்ப முடியவில்லை.

நிமல் தான் கண்ணுற்ற விபத்தின் விளைவாக அவன் பாதிக்கப்பட்டுள்ள மன உளைச்சலிற்காக கவனயீனமாக செயற்பட்ட சாரதியிடமிருந்து நிவாரணம் பெற விரும்புகிறான் தீங்கியல் சட்டத்தின் கீழ் நரம்பியல் மண்டலத் தாக்கம் (nervous shock) என்பதற்கான நிவாரணத்தை நிமல் வெற்றிகரமாக கோரமுடியுமா?

உமது விடையை தீர்க்கப்பட்ட தீர்ப்புச்சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

7. “நிறையளிப்பு” என்பது சாதாரண மற்றும் சட்டபொருள் இரண்டிலும் வழிதவறுதலை சுட்டிக்காட்டுவதுடன் ஒரு பெண்ணை நிறையளிப்பு செய்த ஆண் ஒருவன் அவளது கன்னித்தன்மையின் இழப்பிற்கான சேதம் மற்றும் அவளது திருமண எதிர்பார்ப்புக்களிற்கான தொடர்ச்சியான தடை என்பனவற்றுக்கு நிவாரணம் செலுத்த பொறுப்புடைமை ஆகிறான்.”

R.G Mckerron, The Law of Delict, (7$^{th}$ ed) 1971, at 240

மேலுள்ள கூற்றின் அடிப்படையில் நிறையளிப்பு தொடர்பில் பின்வருவனவற்றை ஆராய்க.

அ) நிறையளிப்பு என்பதன் பொருளும் உள்ளடக்கங்களும் (05 புள்ளிகள்)

ஆ) நிறையளிப்பை நிரூபிக்க வேண்டிய திறம் (05 புள்ளிகள்)

இ) நிறையளிப்பு தொடர்பான வழக்கிற்கு கிடைக்கத்தகு எதிர்வாதம் (15 புள்ளிகள்)

உமது விடையை தீர்ப்புச்சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -